[19th August 1960

Harijan Welfare House-building Schemes

*296 *Q.*—Sri M. A. B. ARUMUGHASAMY : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1959-60 ஆண்டில் ஹரிஜன நல வீடு கட்டும் திட்டத்தின் கீழ் மதுரை ஜில்லாவில் திண்டுக்கல் ரெவின்யூ டிவிஷனில் எந்தெந்த ஊரில் எத்தனை வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டது?

(ஆ) அவைகளில் எந்தெந்த ஊர்களில் எத்தனை வீடுகள் கட்டி முடிக்கப்பட்டன?

(இ) அவைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

The Hon. Sri P. KAKKAN : (அ) & (இ) A statement[a] is placed on the table of the Assembly.

(ஆ) Information is being collected and will be placed on the table of the House as soon as possible.

Sri M. A. B. ARUMUGHASAMY : ஸார், ஸ்டேட்மெண்டில் கொடுத்துள்ளபடி கட்டப்பட்ட வீடுகள் அனைத்தும், ஹரிஜனங்களுக்காக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்டபடி, கட்டப்பட்ட வீடுகள்தானா? அல்லது ஒதுக்கப்பட்ட வீடுகளில் ஏதாவது ஒரு தொகுதியில் கட்டுவதற்கு தாமதம் ஏற்பட்டதால் மற்றொரு தொகுதிக்கு மாற்றி கட்டப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : கட்டப்பட்ட வீடுகளுக்குக் கொடுக்கப்பட்ட பணம் ஹரிஜன நல இலாகாவிலிருந்துதான் கொடுக்கப்பட்டது. இதரத் தொகுதிகளுக்கு மாற்றப்பட்டதைக் குறித்துத் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

Sri A. GOVINDASAMY : மேஜை மீது வைக்கப்பட்டிருக்கும் அறிக்கையைப் பார்க்கும்போது மற்ற மாவட்டங்களைக் காட்டிலும் அதிகமாக மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல் பகுதியில்—150 வீடுகள் — கட்டப்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டத்திற்கு மட்டும் விசேஷ சலுகை காட்டக் காரணம் என்ன?

The Hon. Sri P. KAKKAN : மதுரை ஜில்லாவுக்கு மட்டும் தனிச் சலுகை என்பதல்ல. ஒவ்வொரு ஜில்லாவிலும் அந்தந்த அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதில் வீடுகள் கட்டிக் கொடுக்கத் திட்டமிடுகிறோம்.

Boat Building Industry

*297. *Q.*—Sri N. MARUDACHALAM (on behalf of Sri V. K. KOTHANDARAMAN) : கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) படகு கட்டும் தொழிற்சாலை எங்கே உள்ளது?

(ஆ) இல்லையெனில், ஆரம்பிக்க உத்தேசம் உண்டா? எப்போது (?) எங்கே?

(a) Printed as Appendix II on page 107 infra.

19th August 1960]

THE HON. SRI R. VENKATARAMAN : (அ) & (ஆ) There are at present only small private units for building fishing boats in Cuddalore, Tuticorin, Nagapattinam, etc. The Government have sanctioned a scheme for the construction of a departmental boat building yard at a cost of Rs. 1,65,000 for fishing craft near Royapuram.

As regards construction of larger boats for transport of passengers and cargo, it is a matter coming within the purview of the Central Government. This Government have however requested the Government of India to establish a few such boat-building yards in Madras State.

SRI K. VINAYAKAM : What is the extent of progress that has been so far achieved in the Royapuram yard, Sir?

THE HON. SRI R. VENKATARAMAN : The Public Works Department have submitted their revised estimate for the lay-out of the proposed yard and the estimate is under scrutiny.

SRI A. GOVINDASAMY : கடலூரில் தனியார்கள் "போட்" கட்டும் தொழிலுக்கு அரசாங்கம் என்ன உதவி செய்திருக்கிறது?

THE HON. SRI R. VENKATARAMAN : என்ன உதவி கேட்கிறார்களோ அது கொடுக்கப்படும்.

SRI A. VEDARATHNAM : நாகையில் ஏற்பட்டிருக்கும் படகு கட்டும் தொழிற்சாலையில் என்ன மாதிரியான படகுகள் இப்போது கட்டப்படுகின்றன? இதுவரை எத்தனை படகுகள் கட்டப்பட்டிருக்கின்றன? அப்படிக் கட்டப்படும் படகுகளில் "பவர்" இணைக்க ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

THE HON. SRI R. VENKATARAMAN : இவை தனியார் கட்டும் மீன் பிடிக்கும் படகுகள். எவ்வளவு படகுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்ற தகவல் சர்க்காரிடத்தில் இல்லை. விசைப் படகுகள் கட்ட சர்க்காரிடம் உதவிகோரினால் அது பற்றிச் சர்க்கார் பரிசீலிக்கும்.

SRI S. RANGANATHA MUDALIAR : Does boat-building include steam boat-building?

THE HON. SRI R. VENKATARAMAN : That comes under the purview of the Government of India, i.e., larger cargo and passenger boats.

SRI K. ANBAZHAGAN : விசைப் படகுகளைத் தனியார் கட்ட, அரசாங்கம் எந்த அடிப்படையில் உதவி செய்ய முன் வருகிறது? எந்த விகிதாசாரத்தில் உதவி கொடுக்கப்படுகிறது? அதே போல் விசைப் படகுகள் மீனவர் இலாகா சார்பிலும் கட்டப்படுகின்றனவா?

THE HON. SRI R. VENKATARAMAN : மீனவர் இலாகாவினால் கட்டப்படுவதைப்பற்றித் தனிக் கேள்வி கனம் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களுக்குப் போட வேண்டும். மற்றப்படி, படகு கட்டும் தொழிற்சாலை அமைக்க தனியார் முன்வந்தால்

சர்க்கார் உதவி கிடைக்கும். என்னென்ன விதமான உதவிகள் தேவையென்று கோருகிறார்களோ அதைச் சர்க்கார் பரிசீலித்து உதவி செய்கிறது.

Free supply of cows and buffaloes to Harijans

*298 *Q.*—SRI P. G. MANICKAM: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஹரிஜனங்களுக்கு பசுமாடுகளும், எருமைகளும் இலவசமாக வாங்கிக் கொடுப்பதற்கான திட்டமானது அரசாங்கத்தால் பரிசீலனை செய்யப்பட்டுவரின், விவரங்கள் யாவை?

THE HON. SRI P. KAKKAN: There is no such proposal under consideration now.

SRI P. G. MANICKAM: ஸார், நமது அரசாங்கமானது சமுதாய நலத் திட்டம், தேசீய விஸ்தரிப்புத் திட்டம் மூலமாக மக்களுடைய பொருளாதாரத்தை உயர்த்துவதற்காக பசு மாடு களையும், எருமைகளையும் பாதி விலைக்கு வாங்கிக் கொடுக்கிறார்கள். ஆனால் அந்தப் பாதி விலையைக்கூட ஹரிஜனங்கள் கொடுக்க முடியாமல் இருப்பதால் ஹரிஜன நல இலாகா மூலமாக இவர்களுக்கு இலவசமாகவே இவற்றை வாங்கிக் கொடுக்க—சட்டத்தில் இடமில்லாவிட்டாலும், சட்டத்தை மாற்றியாவது—சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI P. KAKKAN: உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் ஹரிஜனங்களுக்குக் காளை மாடுகள் இலவசமாக வாங்கிக் கொடுக்கப்பட்டு உற்பத்தியைப் பெருக்க ஏற்பாடு செய்யப்பட்டது. பசு மாடு வாங்கிக் கொடுப்பது அவ்வளவு நல்லதல்ல என்று இந்த அரசாங்கம் முடிவு செய்திருப்பதால் அதை வாங்கிக் கொடுக்கத் தயாராக இல்லை. ஏழை ஹரிஜன மக்களுக்குப் பசு மாடுகள் வேண்டுமானால் கூட்டுறவுச் சங்கங்கள் வைத்து அதன் மூலம் அரசாங்கத்திற்கு விண்ணப்பித்தால் அவர்களுடைய பிழைப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI A. GOVINDASAMY: ஆதித் திராவிட மக்கள் நிலத்தை உழ காளை மாடுகள் வாங்கிக் கொடுப்பதில் சில காளைகள் நோய் வாய்ப்பட்டு விட்டால், அவர்களுக்கு இந்த அரசாங்கம் எப்படிச் சலுகை கொடுக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: மனிதர்களுக்கே நோய் வந்து விடுகிறது. மாட்டுக்கும் வந்து விடுகிறது. மாடுகள் நோயுற்றிருந்தால் ஹரிஜன நல இலாகா அதிகாரிக்கு எழுதினால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.